# மின்சார வாரிய 'ஹெல்பர்', பஸ் டிரைவர் பதிவு மூப்பு பட்டியல் வெளியீடு

## 6-ந் தேதிக்குள் சரிபார்க்க பதிவுதாரர்களுக்கு வேண்டுகோள்

சென்னை, ஆக.3-

மின்சார வாரிய ஹெல்பர், மாநகர போக்குவரத்துக்கழக டிரைவர் பணிக்கான பதிவு மூப்பு பட்டியலை சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வெளியிட்டது. தகுதியுள்ள பதிவுதாரர்கள் தங்கள் பதிவுமூப்பை 6-ந் தேதிக்குள் சரிபார்த்துக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

இதுதொடர்பாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பம்) வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

### ஹெல்பர் பணி

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 'ஹெல்பர்' பணி இடங்கள் வேலைவாய்ப்பு பதிவுமூப்பு மூலமாக நிரப்பப்பட உள்ளன. இந்த பதவிக்கான கல்வித்தகுதி எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சியுடன் ஐ.டி.ஐ.யில் வயர்மேன் அல்லது எலெக்ட்ரிசியன் படிப்பு முடித்திருக்க வேண்டும்.

வயது வரம்பு 1.7.2012 அன்றைய தேதிப்படி, பொதுப்பிரிவினருக்கு 30. பி.சி., எம்.பி.சி. வகுப்பினருக்கு 32. எஸ்.சி. பிரிவினருக்கு 35 ஆகும். நிர்ணயிக்கப்பட்ட கல்வித்தகுதியை விட அதிக கல்வித்தகுதி கொண்ட பி.சி., எம்.பி.சி., எஸ்.சி. வகுப்பினருக்கு வயது வரம்பு கிடையாது. பதிவுமூப்பு கட் ஆப் தேதி கீழே கொடுக்கப்பட்டு உள்ளது.

### பதிவுமூப்பு பட்டியல்

எஸ்.சி. அருந்ததியர் – 27.1.2012

எஸ்.சி. மகளிர் – 13.7.2012

எஸ்.சி. பொது – 6.12.2000

எஸ்.டி. மகளிர் – 18.5.2012

எஸ்.டி. பொது – 30.10.2008

எம்.பி.சி. மகளிர் – 16.7.2012

எம்.பி.சி. பொது – 18.1.2001

பி.சி. மற்றும் ஓ.சி. பொது – 26.12.2001

பி.சி. மகளிர் – 30.7.2012

ஓ.சி. மகளிர் – 3.2.2012

பி.சி. முஸ்லிம்–பொது – 28.6.2005

பி.சி. முஸ்லிம்–மகளிர் – 18.5.2012